Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.1 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு. தங்கவேல்** | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் நாமக்கல் மாவட்டம், குப்புரிக்காபாளையம் வீரக்குட்டை குடித்தெருவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1வது எதிரி கொல்லப்பட்டியில் குடியிருந்து வருகிறார். அவரது தோட்டம் வீரக்குட்டை ஆலாங்காட்டு தோட்டத்தில் எனது தோட்டத்திற்கு இணை போலியாக வடப்புறத்தில் அவரது தோட்டம் உள்ளது. எனது தோட்டம் சர்வே எண்.11-1பி-3 ல் 2 ஏக்கர் நிலமும் 62/1பி-ல் 1 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 3 ஏக்கர் 20 செண்ட் ஆகும். சம்பவ சமயம் எனது தோட்டத்தில் கரும்பு விவசாயம் செய்திருந்தேன். அதற்குள் 2 வருட 220 தென்னங்கன்றுகளும் இருந்தது. கரும்பு 7 மாத பயிராக இருந்தது. 1வது எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே பொலி பிரச்சனை இருந்தது. 27.7.2024 அன்று காலையில் 10.45 சுமாருக்கு நான் கரும்பு காட்டிற்குள் பிடுங்கி இருந்த ஒஸ்களை போட்டு கொண்டிருந்தேன். அப்போது 1வது எதிரி தன்னிடம் வேலை பார்க்கும் 2வது எதிரியிடம் கரும்பு வெட்டிய தனது காட்டிற்கு தீ வைக்குமாறும், அந்த தீ பரவி அருகிலுள்ள எனது நிலத்தில் உள்ள கரும்பு மற்றும் தென்னங்கன்றுகள் சொட்டு நீர் பைப் லைன் ஆகியவை எரிந்து நாசமாகட்டும் என்றும் சொன்னார். அதன்பிறகு 1வது எதிரி சொன்னதன் பேரில் 2வது எதிரி 1வது எதிரியின் காட்டுக்கும் எனது காட்டுக்கும் இடையே இருந்த பொலி அருகே வெட்டிய கரும்பு தோகையில் தீ வைத்து விட்டார். பிறகு 10 நிமிடத்தில் 1வது எதிரியின் கரும்பு வெட்டிய காட்டில் வைத்த தீ அருகிலுள்ள எனது நிலத்திற்குள் பிடித்து எரிய தொடங்கிவிட்டது. நான் உடனே தீயணைப்புத்துறைக்கு போன் செய்தேன்.

தீயணைப்புத்துறையினர் வந்து தீ அணைப்பதற்குள் என் நிலத்தில் இருந்த பயிர்கள் எரிந்து நாசமாகிவிட்டது. அவ்வாறு எனது நிலத்தில் எரிந்து நாசமான பயிர்கள் மற்றும் பொருட்களின் மதிப்பு ரூ.20,00,000/- இருக்கும். பக்கத்து காட்டை சேர்ந்த சதாசிவம் மற்றும் பழனிவேல் ஆகியோர் டிராக்டர் ரொட்டேடரை ஓட்டி வந்து ஓட்டி எனது 1 ஏக்கர் கரும்பில் தீ பரவாமல் பாதுகாத்தார்கள். தீயில் எனது நிலத்திலிருந்த 3.20 ஏக்கரில் பயிர் செய்து வந்த கரும்பு பயிர்கள் அந்த நிலத்தில் வைத்திருந்த 2 வருட 220 தென்னங்கன்றுகள், சொட்டு நீர் பைப்கள், டியுப்கள், கன்ட்ரோல் வால்வுகள் ஆகியவை எரிந்து நாசமாகிவிட்டது. அதன்பிறகு, நான் போய் பழனியப்பனிடம் எதற்காக தீ வைக்க சொன்னாய் என்று கேட்டதற்கு "அப்படிதான் வைப்பேன் இதற்கு மேல் பேசினால் உன்னையும் பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன்" என்று மிரட்டினார். பஞ்சாயத்து பேசி பிரச்சனையை தீர்த்து கொள்ளலாம் என்று ஊர்பஞ்சாயத்தார்கள் சொன்னார்கள். பஞ்சாயத்திற்கு 1ம் எதிரி பழனியப்பன் வராததால் 31.07.2024ம் தேதி காலை 9 மணிக்கு நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.1 ஆகும்.

போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு இழப்பீடு கிடைக்க உத்தரவாக வேண்டும்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை **:** இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.2 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு. சதிஷ்குமார்** | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது குடித்தெரு, வீரக்குட்டை, குப்புரிக்காபாளையம் பரமத்தி வேலூர் தாலுகாவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ரிக் வண்டி வைத்தும் தொழில் செய்கிறேன். சாட்சி தங்கவேல் எனது அப்பா. எங்கள் குடும்பத்துக்கு சொந்தமாக குப்புரிக்கா பாளையம் கிராமம், வீரக்குட்டை ஆலாங்காட்டு தோட்டம் சர்வே எண்.11 – 1பி-3-ல் 2.20 ஏக்கர் 62/1பி ல் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. இவ்வழக்கு சம்பவம் 27.07.2024 ல் நடந்தது. சம்பவ சமயம் எங்களது தோட்டத்தில் 3.20 ஏக்கரில் 7 மாத கரும்பு பயிரும், 2 வருட தென்னங்கன்றுகள் 220ம் பயிரிடபட்டு இருந்தது. 1வது எதிரி பழனியப்பன் எங்கள் பக்கத்து காட்டுகாரர். 2வது எதிரி 1வது எதிரியின் காட்டில் வேலை செய்து வந்தார். எங்கள் காட்டிற்கும் 1வது எதிரி காட்டிற்கும் இடையே பொது பொலி உள்ளது. 1வது எதிரிக்கும் எங்களுக்கும் ஏற்கனவே பொலி பிரச்சனை இருந்து வந்தது. நான் 27.07.2024ம் தேதி காலை 10 மணியிலிருந்து எங்கள் தோட்டத்தின் கிணற்றுக்கு அருகே ரிக் வண்டிக்கு பெயிண்ட் அடித்து கொண்டிருந்தேன். அப்போது ரோட்டில் வந்த 100 நாள் வேலை செய்பவர்கள் எங்கள் கரும்பு காட்டில் தீ பிடித்து எரிந்து புகையாக வருகிறது என்று சொன்னார்கள். நானும் எனது தம்பியும் எங்கள் காட்டுக்குள் ஓடினோம். அங்கு என் அப்பா இருந்தார். அவரிடம் எப்படி தீ பிடித்தது என்று கேட்டேன். அதற்கு என் அப்பா பக்கத்து காட்டுக்காரர் பழனியப்பன் கரும்பு வெட்டிய தோகையை எங்கள் வரப்பு அருகே சுத்தம் செய்யாமல் தீ வைத்ததால் தீப்பிடித்தது என்று சொன்னார். தீயணைப்பு துறைக்கு போன் செய்ததாக சொன்னார். 1 மணி நேரம்

கழித்து தீயணைப்புத் துறை வாகனம் வந்தது. பக்கத்து காட்டை சேர்ந்த சதாசிவம், பழனிவேல் மற்றும் பலரும் டிராக்டரை எடுத்து கொண்டு வந்து அடுத்த காட்டுக்கு பரவாமல் இருக்க நிலத்தில் ரொட்டேடரை வைத்து ஓட்டினார்கள். அதனால் எங்கள் காட்டில் தனியாக இருந்த 1 ஏக்கர் கரும்பு பயிர் காப்பாற்றப்பட்டது. தீ மற்ற காட்டிற்கு பரவாமல் தடுக்கப்பட்டது. தீயணைப்புத் துறையினர் எரிந்து கொண்டிருந்த தீயினை அணைத்தார்கள். எங்கள் காட்டில் 3.20 ஏக்கரில் பயிர் செய்திருந்த 7 மாத கரும்பு பயிரும், 2 வருட 220 தென்னங்கன்றுகளும், நெட்டோபார்ம் சொட்டு நீர் ஒஸ், பிவிசி பைப்கள், ஆட்டோ கன்ட்ரோல் வால்வுகள் ஆகியவை எரிந்து நாசமாகிவிட்டது. அதன் மதிப்பு சுமார் ரூ.20,00,000/- இருக்கும். பிறகு, கரை மேல் நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்த பழனியப்பனிடம் எனது அப்பா எதற்காக தீ வைக்க சொன்னாய் என்று கேட்டதற்கு "நான் அப்படித்தான் வைப்பேன் உன்னால் முடிந்ததை பார்த்துக் கொள் என்றும், மீறி பேசினால் உன்னை பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொளுத்திவிடுவேன்" என்று சொன்னார். அதன்பிறகு, 31.07.2024-ல் நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் 27,28,29ம் தேதியில் காலை 7 மணிக்கு என்னுடைய VIVO செல்போனில் எரிந்து போன கரும்பு காடு, தென்னை மரங்கள் பைப்புகள் வால்வுகள் ஆகியவற்றை போட்டோ எடுத்தேன். பின்பு, ஆகஸ்ட் 19,20,21ம் தேதியில் தோட்டக்கலையில் இருந்து வந்திருந்த நபர்கள் முன்னிலையில் எனது செல்போனில் போட்டோக்கள் எடுத்தேன். ஆகஸ்ட் 26ம் தேதி திருச்செங்கோடு ஸ்ரீ தென்றல் டிஜிட்டல் ஸ்டுடியோவில் எனது மொபைலை கொடுத்து வாட்ஸ்அப் மூலம் 5 புகைப்படங்களை அனுப்பி கம்ப்யுட்டர் மூலம் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்தேன். அந்த புகைப்படங்களை போலீசாரிடம் சிடியுடன் கொடுத்தேன். நான் எடுத்துக் கொடுத்த 5 போட்டோக்கள் சா.பொ.1 ஆகும். அதற்கான சிடி சா.பொ.2 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.3 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு. சுரேஷ்குமார்** | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது குடித்தெரு, வீரக்குட்டை, குப்புரிக்காபாளையம் பரமத்தி வேலூர் தாலுகாவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ரிக் வண்டி வைத்து தொழில் செய்கிறேன். எங்கள் குடும்பத்துக்கு குப்புரிக்காபாளையம் கிராமம், வீரக்குட்டை ஆலாங்காட்டு தோட்டம் சர்வே எண்.11 – 1பி-3-ல் 2.20 ஏக்கர் 62/1பி ல் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. இவ்வழக்கு சம்பவம் 27.07.2024ல் நடந்தது. சம்பவ சமயம் எங்களது தோட்டத்தில் 3.20 ஏக்கரில் 7 மாத கரும்பு பயிரும், 2 வருட 220 தென்னங்கன்றுகள் பயிரிடபட்டு இருந்தது. 1வது எதிரி பழனியப்பன் எங்கள் பக்கத்து இணைப்பொலிக்காட்டுகாரர். 2வது எதிரி 1வது எதிரியின் காட்டில் வேலை செய்கிறார். 1வது எதிரிக்கும் எங்களுக்கும் ஏற்கனவே பொலி பிரச்சனை இருந்து வந்தது. 27.07.2024ம் தேதி காலை 10 மணியிலிருந்து எங்கள் தோட்டத்தின் கிணற்றுக்கு அருகே ரிக் வண்டிக்கு நானும் எனது அண்ணன் சதிஷ்குமாரும் மற்றும் பெயிண்ட் அடிப்பவர்களும் சேர்ந்து பெயிண்ட் அடித்து கொண்டிருந்தோம். அப்போது ரோட்டில் வந்த 100 நாள் வேலை செய்பவர்கள் எங்கள் கரும்பு காட்டில் தீ பிடித்து எரிந்து புகையாக வருகிறது என்று சொன்னார்கள். நானும் எனது அண்ணனும் போய் பார்த்தோம். என் அப்பா இருந்தார். எங்கள் காட்டுக்குள் தீ பரவி பாதி காடு எரிந்திருந்தது. பழனியப்பன் காட்டில் வெட்டிய கரும்பு தோகையில் வைத்த தீ எங்கள் காட்டிற்குள் பரவி எரிந்தது. என் அப்பாவிடம் கேட்டதற்கு பழனியப்பனின் வேலையாள் கந்தசாமி பழனியப்பன் தூண்டுதலின் பேரில் தீ வைத்ததாக சொன்னார். தீயணைப்புத் துறைக்கு போன் செய்திருப்பதாக

சொன்னார். 1 மணி நேரம் கழித்து தீயணைப்புத் துறை வண்டி வந்தது. தீயை அணைத்தது. அதற்கு முன்பே சதாசிவம், பழனிவேல், ராசு ஆகியோர் டிராக்டரை கொண்டு வந்து ரொட்டேடர் மூலம் நிலத்தில் உழுது மீதமிருந்த எங்களது ஒரு ஏக்கர் கரும்பு காட்டுக்கும், பக்கத்திலிருந்த காட்டிற்கும் தீ பரவாமல் தடுத்துவிட்டார்கள். அதன்பிறகு என் அப்பா பழனியப்பனிடம் ஏன் தீ வைக்க சொன்னாய் என்று கேட்டதற்கு 1வது எதிரி பழனியப்பன் "நான் அப்படித்தான் வைப்பேன் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் இதற்கு மேல் பேசினால் பெட்ரோல் ஊற்றி உன்னையும் தீ வைத்து கொளுத்தி விடுவேன்" என்று மிரட்டினார். அதன்பிறகு ஊர்க்காரர்கள் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். 1வது எதிரி பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. அதனால் என் அப்பா 31.07.2024ம் தேதி நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எங்கள் காட்டிலிருந்த 2வருட தென்னங்கன்றுகள், 3.20 ஏக்கரில் பயிரிடபட்டிருந்த 7 மாத கரும்பு, சொட்டு நீர் ஓஸ், 3 இஞ்ச் பைப்கள், ஆட்டோமேடிக் கேட் வால்வுகள் 5 ஆகியவை எரிந்து நாசமாகிவிட்டது. அதன் மதிப்பு சுமார் ரூ.20,00,000/- இருக்கும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை **:** இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

### Sessions Case No. 25 of 2025

### Deposition of P.W.4 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு. சதாசிவம்** | Caste | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் குப்புரிக்காபாளையம் கிராமம், பரமத்தி வேலூர் தாலுக்காவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி தங்கவேலுவை தெரியும். 1வது எதிரி பழனியப்பனை தெரியும். 2வது எதிரி கந்தசாமியையும் தெரியும். 1வது எதிரி காட்டிற்கு வடபுறம் எனது தோட்டம் உள்ளது. 2வது எதிரி கந்தசாமி 1வது எதிரியின் தோட்டத்தில் பண்ணையாளாக வேலை செய்கிறார். தங்கவேலு தோட்டம் 1வது எதிரியின் காட்டிற்கு தெற்கே உள்ளது. தங்கவேலுக்கு மொத்தம் 4 ஏக்கர் 20 செண்ட் நிலம் உள்ளது. சம்பவம் 27.07.2024ல் நடந்தது. சம்பவத்தின்போது தங்கவேலு காட்டில் கரும்பு பயிர் செய்திருந்தார். சுமார் 7 மாத கரும்பு 2வருட தென்னை மரங்களுக்குள் ஊடுபயிராக இருந்தது. 220 தென்னை மரங்கள் 3 ஏக்கர் 20 செண்டில் இருந்தது. சம்பவம் காலை 11 மணி சுமாருக்கு நடந்தது. நான் அப்போது எனது தோட்டத்தில் இருந்தேன். 100 நாள் வேலையாட்கள் என் காட்டிற்கு தெற்கு பகுதியில் உள்ள காட்டில் தீ பிடித்து எரிவதாக சத்தம்போட்டார்கள். நான் போய் பார்த்தேன். கரும்பு வெட்டப்பட்ட பழனியப்பன் காட்டிலும் தங்கவேலு காட்டிலும் தீ பிடித்து எரிந்து கொண்டிருந்தது. நானும் பக்கத்து காட்டை சேர்ந்த பழனிவேலும் எனக்கு சொந்தமான டிராக்டரை ரொட்டேடருடன் எடுத்து சென்று தீ பரவாமல் தடுப்பதற்காக தங்கவேலு நிலத்தில் ரொட்டேட்டர் மூலம் கரும்பை வெட்டிவிட்டோம். அதனால் தங்கவேலு மனைவி பெயரில் இருந்த 1 ஏக்கர் நிலத்திலிருந்த கரும்பு எரியாமல் காப்பாற்றப்பட்டது. தீ வேறு காட்டிற்கு பரவாமல் தடுக்கப்பட்டது. தங்கவேலு தீயணைப்பு துறைக்கு தகவல் சொல்லி தீயணைப்புத்துறை வண்டி வந்து எரிந்து கொண்டிருந்த

தீயை அணைத்தது. தங்கவேலுவிடம் எப்படி தீ பிடித்தது என்று கேட்டேன். அதற்கு அவர் 1ம் எதிரி பழனியப்பன் எனது பொலி அருகே கரும்பு தோகையை ஒதுக்கி போட்டு சுத்தம் செய்யாமல் 2வது எதிரியிடம் தீ வைக்க சொன்னதால் பழனியப்பன் காட்டிலிருந்து தீ பரவி தங்கவேலு காட்டில் தீ பிடித்துவிட்டதாக சொன்னார். தங்கவேலு காட்டில் 3 ஏக்கர் 20 செண்ட் கரும்பு பயிரும் அதிலிருந்த 2 வருட 220 தென்னங்கன்றுகளும், அதில் இருந்த சொட்டு நீர் உபகரணங்களும், ஆட்டோமெடிக் வால்வுகளும், பிவிசி பைப்புகளும் எரிந்து நாசமாகிவிட்டது. தங்கவேல் காட்டில் எரிந்து போன சொத்துக்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ.20,00,000/- இருக்கும். நாங்கள் தீயணைப்புத்துறை வந்தவுடன் எங்கள் டிராக்டரை வயல் ஓரத்தில் நிறுத்தியிருந்தோம். அப்போது தங்கவேல் பழனியப்பனிடம் ஏன் இப்படி தீ வைத்தாய் என்று கேட்டதற்கு "அப்படித்தான் வைப்பேன் என்று விவாதம் செய்தார். இதற்கு என்னிடம் வந்து பேசினால் பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன்" என்று தங்கவேலை மிரட்டினார். ஊர் பஞ்சாயத்திற்கு சொல்லியிருந்தோம். பழனியப்பன் பஞ்சாயத்து பேசுவதற்கு வரவில்லை. தீப்பிடித்து கொண்டிருந்த போது பழனியப்பன் தீயை அணைக்க எந்த முயற்சியும் செய்யாமல் பொலியில் நின்று கொண்டிருந்தார். அதனால் தங்கவேல் 31.07.2024ம் தேதி நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : இல்லை.